இந்திய வரிப்பணமும் ஆங்கிலேய அரசாட்சியும்

ஆசிரியர் :
ஜே. ஸி. குமரப்பா

மொழி பெயர்ப்பாளர் :
மீ. விநாயகம்

சுதந்திர பாரத் வெளியீடு
நுங்கம்பாக்கம், சென்னை 6
1947

முதற்பதிப்பு ஆகஸ்ட், 1947

THE MADUR

[விலை ரூ. 1-8-0]

Printed at Kabeer Printing Works, Madras MS. 524.
Published by Swathanthra Bharat Publications, MS. T. P. 470.

பொருளடக்கம்

அத்தியாயம்			பக்கம்
	மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை	...	v
	முன்னுரை	...	ix
1.	பூர்வ பீடிகை	...	1
2.	கிழக்கு இந்தியக் கம்பெனி	...	12
3.	விக்டோரியா ராணியின் அரசாட்சிக் காலம்	...	17
4.	சமீப காலம்	...	51
5.	அடகு பிடிக்கும் முறை	...	59
6.	முடிவுரை	...	77



ஜே. ஸி. குமரப்பா

முன்னுரை

தனக்கு உரிமை இல்லாத பிறரின் பொருள்களைக் கண்டு பேராசை கொள்ளுகின்ற ஒருவன் அப்பொருள்களை அபகரித்துக் கொள்ளப் பல்வேறு தந்திரங்களைக் கைக்கொள்ளுகிறான். இவைகளில் சர்வ சாதாரணமாகக் கருதப்படுவது வழிமறித்தல். அதாவது பொருள் உள்ளவன் தனிவழியே போக நேரிடுங்கால் அவனை வழி மறித்துப் பயமுறுத்துவதால் அவன் தன் உயிருக்கு அஞ்சிப் பொருள்களை எறிந்துவிட்டு ஓட்டமெடுக்கிறான். இதற்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூடியது, வஞ்சகன் பொருளுள்ளவனை அண்டிச்சென்று தன்னை அவனுடைய நம்பிக்கைக்கு உரியவனாக முதலில் செய்து கொள்ளுதல்; இக் கபட நாடகத்திற்குப் பிறகு, தன் கைவரும் தொகைகளைத் தன் சொந்தத்திற்கு உபயோகித்தல். மூன்றாவது தந்திரம் சாதாரணமாக வரவுசெலவுக் கணக்கு எழுதுவோருக்குத் தெரிந்திருக்கக் கூடியதே. அதாவது பொய்க் கணக்கு எழுதுவது. வாங்காத சாமான்களை வாங்கியதாகச் செலவு எழுதவும், விற்று வந்த தொகையைச் சரியானபடி வரவு வைக்காமலும், சேமிப்புத் தொகையைச் சிறுகச் சிறுகச் சுரண்டுவதும், இன்னும் இதுபோன்ற பல்வேறு தந்திரங்களையும் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். நான்காவதாக: முதலாளியின் விலையுயர்ந்த பொருள்களை அற்பத் தொகைக்கு அடகுவைத்து உபயோகித்துக் கொள்ளுதல். கடைசியாக ஒரு சொத்திற்குத் தருமகர்த்தாவாக நியமிக்கப்பட்ட பிறகு, அச்சொத்துக்களை சுயநலத்திற்கு உபயோகித்தல். சொத்தின் உடைமைக்காரர்களுக்குக் காலணாவும் கண்ணில் காட்டுவதில்லை.